ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2253/63 - 2021 නොවැම්බර් මස 13 වැනි සෙනසුරාදා - 2021.11.13

*2253/63 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கை தொழிநுட்பக் கல்விச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு - முதலாவது திருத்தம்**

*2020, யூலை 06 ஆந் திகதிய மற்றும் 2183/20 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*2021, நவெம்பர் 10.*

***7.2.4 இல்,***

I. *மின்னியல், உலோக வேலை, மர வேலை, கட்டிடம், தொழில்நுட்ப சித்திரம், மோட்டார் இயந்திரவியல், தங்க ஆபரணம், குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி, இலத்திரனியல், சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து ஆகிய தொழிற்துறைகளுக்கான போதனாசிரியர் மற்றும் விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் தொழிற்தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படுவர்.*

IV. *மேற்படி இலக்கம் I இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளைச் சாராத தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம்/கணிதம், வர்த்தகம், விவசாயம் மற்றும் ஆங்கிலம் போன்ற துறைகளின் போதனாசிரியர் பதவி மற்றும் விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையின் மற்றும் செயல்முறைப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாத்திரம் ஆட்சேர்க்கப்படுவர். செயல்முறைப் பரீட்சை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்*

1A -G 35323 — 15 (2021/11)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும். செயல்முறைப் பரீட்சையின் பெறுபேறுகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் உளச்சார்பு, பொது அறிவு, செயல்முறைப் பரீட்சையின் புள்ளிகளுக்கு முறையே 1:1:1 விகிதத்திற்கு நிறைவைத்து எழுத்துமூலப் பரீட்சைக்கு மற்றும் செயல்முறைப் பரீட்சைக்குத் தனித்தனியாக 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் திறமை தொடர் ஒழுங்குமுறைக்கு அமைய பட்டியலிடப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

**7.2.4.3 செயல்முறைப் பரீட்சை :**

விண்ணப்பதாரியிடம் காணப்படும் கற்பித்தல் திறனை மதிப்பிடுவதற்காக இப் பரீட்சை நடாத்தப்படுவதோடு, இதற்கு 25 புள்ளிகள் வழங்கப்படும். செயல்முறைப் பரீட்சை தொடர்பான விபரங்கள் "ஊ" பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**7.2.4.3.1** செயல்முறைப் பரீட்சையை நடாத்தும் அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சை சபை யொன்று

**7.2.4.4 பொதுவான நேர்முகப் பரீட்சை :**

நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் :
இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு அமைவாக வெளியிடப்படும் ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளனவா என்பதைப் பரீட்சித்தல் மற்றும் உடற் தகைமைகளைப் பரீட்சித்தல்.

**7.2.4.4.1** பொதுவான நேர்முகப் பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழு

**7.3.4 இல்,**

I. மின்னியல், உலோக வேலை, மர வேலை, கட்டிடம், தொழில்நுட்ப சித்திரம், மோட்டார் இயந்திரவியல், தங்க ஆபரணம், குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி, இலத்திரனியல், சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து ஆகிய தொழிற்துறைகளுக்கான போதனாசிரியர் மற்றும் விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் தொழிற்தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படுவர்.

IV. மேற்படி இலக்கம் I இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளைச் சாராத தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம்/கணிதம், வர்த்தகம், விவசாயம் மற்றும் ஆங்கிலம் போன்ற துறைகளின் போதனாசிரியர் பதவி மற்றும் விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையின் மற்றும் செயல்முறைப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாத்திரம் ஆட்சேர்க்கப்படுவர். செயல்முறைப் பரீட்சை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும். செயல்முறைப் பரீட்சையின் பெறுபேறுகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் உளச்சார்பு, பொது அறிவு, செயல்முறைப் பரீட்சையின் புள்ளிகளுக்கு முறையே 1:1:1 விகிதத்திற்கு நிறைவைத்து எழுத்துமூலப் பரீட்சைக்கு மற்றும் செயல்முறைப் பரீட்சைக்குத் தனித்தனியாக 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் திறமை தொடர் ஒழுங்குமுறைக்கு அமைய பட்டியலிடப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

**7.3.4.3 செயல்முறைப் பரீட்சை :**

விண்ணப்பதாரியிடம் காணப்படும் கற்பித்தல் திறனை மதிப்பிடுவதற்காக இப் பரீட்சை நடாத்தப்படுவதோடு, இதற்கு 25 புள்ளிகள் வழங்கப்படும். செயல்முறைப் பரீட்சை தொடர்பான விபரங்கள்"ஊ" பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**7.3.4.3.1** செயல்முறைப் பரீட்சையை நடாத்தும் அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சை சபையொன்று

**7.3.4.4 பொதுவான நேர்முகப் பரீட்சை :**

*நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் :*
*இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு அமைவாக வெளியிடப்படும் ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளனவா என்பதை பரீட்சித்தல் மற்றும் உடற் தகைமைகளைப் பரீட்சித்தல்*

***7.3.4.4.1*** *பொதுவான நேர்முகப் பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழு*

**10.3.1. பூரணப்படுத்த வேண்டிய தகைமைகள் :**

*I. பின்னிணைப்பு "I" இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்புடைய துறையில் பட்டப்பின் படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் மனித வள முகாமைத்துவம்/ வணிக முகாமைத்துவம்/ அரச முகாமைத்துவம்/ நிதி முகாமைத்துவம்/ தொடர்பாடல்/கல்வி முகாமைத்துவம்/சமூக விஞ்ஞானம்/சமூக வேலைகள்/சமூக மேம்பாடு/கல்வி/அபிவிருத்திக் கல்வி/அபிவிருத்தி பொருளியல் போன்ற பாடங்களுள் ஏதேனும் ஒன்றைச் சார்ந்த விடயத்துறையில் ஆகக் குறைந்தது ஒரு கல்வி ஆண்டிற்கான கற்கை நடவடிக்கைகள் உள்ளடங்கிய பட்டப்பின் படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

**12.2. பயிற்சி மற்றும் அபிவிருத்தி :**

***12.2.1*** *தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு முன்னர் ஆகக் குறைந்தது நான்கு வார கால (04) (160 மணித்தியாலங்கள்) அடிப்படைக் கற்பித்தல் முறைகள் பற்றிய பயிற்சிப் பாடநெறியைப் பூர்த்தியாக்குதல் வேண்டும்.*
*அதன் போது பயிற்சிக் காலத்தின் இறுதியில் உத்தியோகத்தர்களின் கற்பித்தல் திறன் மதிப்பிடப்பட்டு சான்றிதழொன்று வழங்கப்படும்.*

*விடயப் பொறுப்பு அமைச்சின் அல்லது அமைச்சு செயலாளரினால் தீர்மானிக்கப்படும் வேறு உயர் பயிற்சி அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றினால் இப் பயிற்சிப் பாடநெறி நடாத்தப்படும்.*

***12.2.2.*** *சேவையின் தரம் II ஐச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களும் திணைக்களத்தினால் நடாத்தப்படும் நிறுவன ஒழுங்குவிதிகள், நிதி ஒழுங்குவிதிகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தை பற்றிய 100 மணித்தியாலய பயிற்சிப் பாடநெறியினைப் பூரணப்படுத்தல் வேண்டும். தரம் I இற்கு பதவியுயர்வு பெறுவதற்கு இந்தப் பயிற்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

**"ஆ"பின்னிணைப்பு**
*இப் பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அட்டவணையின் கீழ் பின்வரும் குறிப்பு உள்ளடக்கப்படுகின்றது.*

*குறிப்பு : விரிவுரையாளர் மற்றும் போதனாசிரியர் ஆகிய பதவிகளின் விண்ணப்பதாரிகளினால் விண்ணப்பிக்கப்படும் பாடத்துறைக்குரிய பாடம், பட்டத்தின் அல்லது தொழில்சார் பாடநெறியின் கிறடிற்ஸ் (Credits) எண்ணிக்கையில் ஆகக் குறைந்தது 1/3 இனையேனும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.*

**"இ" பின்னிணைப்பு**
*இப் பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அட்டவணையின் கீழ் பின்வரும் குறிப்பு உள்ளடக்கப்படுகின்றது.*

*குறிப்பு : விரிவுரையாளர் மற்றும் போதனாசிரியர் ஆகிய பதவிகளின் விண்ணப்பதாரிகளினால் விண்ணப்பிக்கப்படும் பாடத்துறைக்குரிய பாடம், பட்டத்தின் அல்லது தொழில்சார் பாடநெறியின் கிறடிற்ஸ் (Credits) எண்ணிக்கையில் ஆகக் குறைந்தது 1/3 இனையேனும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.*

**"உ" பின்னிணைப்பு**

*01. பரீட்சையின் பெயர் : இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான தொழிற்தேர்வு - (திறந்த /மட்டுப்படுத்தப்பட்ட)*

02. பரீட்சை பற்றிய விபரம் :

| பரீட்சை | பாட எண் மற்றும் பாடத்துறை | | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| தொழிற்தேர்வு | 01. | தன்னியக்க தொழில்நுட்பம் (மோட்டார் வாகன தொழில்நுட்பம்) | ஆகக் கூடியது 06 மணித்தியாலங்கள் | 100 |
| | 02. | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | | |
| | 03. | பண்ணை இயந்திர உபகரண தொழில்நுட்பம் | | |
| | 04. | நிர்மாணிப்பு தொழில்நுட்பம் | | |
| | 05. | குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி தொழில்நுட்பம் | | |
| | 06. | உற்பத்தித் தொழில்நுட்பம் | | |
| | 07. | உணவு உற்பத்தித் தொழில்நுட்பம் | | |
| | 08. | உயிரியல் மருத்துவப் பொறியியல் தொழில்நுட்பம் | | |
| | 09. | மெகாரொனிக் தொழில்நுட்பம் | | |
| | 10. | உருகிணைத்தல் தொழில்நுட்பம் | | |
| | 11. | தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் | | |
| | 12. | இலத்திரனியல் தொழில்நுட்பம் | | |
| | 13. | தங்க ஆபரண தொழில்நுட்பம் | | |
| | 17. | இலத்திரனியல் | | |
| | 18. | கட்டிடத் தொழில்நுட்பம் | | |
| | 19. | மோட்டார் இயந்திரவியல் | | |
| | 20. | மர வேலை | | |
| | 21. | குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி | | |
| | 22. | தொழிநுட்ப சித்திரம் | | |
| | 23. | மின்னியல் | | |
| | 27. | உலோக வேலை | | |
| | 28. | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து | | |
| | 29. | தங்க ஆபரணம் | | |

03. பரீட்சையை நடாத்தும் அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சை சபையொன்றினால்

04. பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒரு தடவை நடாத்தப்படும் என்பது பற்றி : தேவைக்கேற்ற வகையில்

05. பரீட்சைக்கு ஏற்புடைய தொழிற்துறைகள் மற்றும் பாடத்திட்டம் :

| பாட எண் மற்றும் பாடத்துறை | | பாடத்திட்டம் |
|---|---|---|
| 01. | தன்னியக்க தொழில்நுட்பம் (மோட்டார் வாகன தொழில்நுட்பம்) | இந்தத் தொழிற் தேர்வுகள் தொழிநுட்பவியல் / தொழிநுட்பக் கல்லூரிகளில் தற்போது நடைபெறும் தேசிய தொழிற் தகைமை மட்டம் 5 (NVQ - 5) பாடநெறிகளின் செயல்முறைப் பரீட்சைகளுக்கு சமமான மட்டத்தில் நடைபெறும். இதன் போது பரீட்சார்த்தி தனது தொழிநுட்ப அறிவு ஏற்புடைய இயந்திர உபகரணங்களை இயக்குவதற்கும் கருவிகளை இனங்காண்பதற்கும் கையாளுவதற்கும் அந்த உபகரணங்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்குத் தனது கைவினைத் திறனை வெளிக்காட்டி புரிந்துணர்வை வழங்குவதற்குள்ள ஆற்றல் பரீட்சிக்கப்படும். |
| 02. | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | |
| 03. | பண்ணை இயந்திர உபகரண தொழில்நுட்பம் | |
| 04. | நிர்மாணிப்பு தொழில்நுட்பம் | |
| 05. | குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி தொழில்நுட்பம் | |
| 06. | உற்பத்தித் தொழில்நுட்பம் | |
| 07. | உணவு உற்பத்தித் தொழில்நுட்பம் | |
| 08. | உயிரியல் மருத்துவப் பொறியியல் தொழில்நுட்பம் | |
| 09. | மெகாரொனிக் தொழில்நுட்பம் | |
| 10. | உருகிணைத்தல் தொழில்நுட்பம் | |
| 11. | தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் | |
| 12. | இலத்திரனியல் தொழில்நுட்பம் | |
| 13. | தங்க ஆபரண தொழில்நுட்பம் | |
| 17. | இலத்திரனியல் | |
| 18. | கட்டிடத் தொழில்நுட்பம் | |
| 19. | மோட்டார் இயந்திரவியல் | |
| 20. | மர வேலை | |
| 21. | குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி | |
| 22. | தொழில்நுட்ப சித்திரம் | |
| 23. | மின்னியல் | |
| 27. | உலோக வேலை | |
| 28. | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து | |
| 29. | தங்க ஆபரணம் | |

**"ஊ" பின்னிணைப்பு**

இலங்கை தொழிநுட்பக் கல்விச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் செயல்முறைப் பரீட்சை பற்றிய விபரங்கள் - (திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட)

1 செயல்முறைப் பரீட்சை :-

செயல்முறைப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங் காணப்பட்ட தனது பாடத் துறைக்குரிய தலைப்பொன்றின் கீழ் முன்னிலைப்படுத்துகையொன்றை மேற்கொள்ளல் வேண்டும். இதன் பொருட்டு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடரிலக்கம் | செயல்முறைப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் தேர்வளவுகள் | உச்சப் புள்ளிகள் | சித்தியடையத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02. | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03. | தெளிவான தொடர்பாடல் | 05 | 02 |
| 04. | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05. | முன்னிலைப்படுத்துகையின் போது உத்திக-ளின் பயன்பாடு | 05 | 02 |
| | மொத்தப் புள்ளிகள் | 25 | 10 |

**2. செயல்முறைப் பரீட்சை முறை :-**

I. செயல்முறைப் பரீட்சைக்கு 05 நிமிடங்கள் வழங்கப்படும்.

II. செயல்முறைப் பரீட்சைக்குப் பெற்றுக் கொள்ளக் கூடிய உச்சப் புள்ளிகள் இருபத்தைந்து (25) ஆகும்.

III. செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைய ஒவ்வொரு தேர்வுமுறைக்கும் ஆகக் குறைந்தது 02 புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

IV. செயல்முறைப் பரீட்சையின் மதிப்பீடானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சை சபையொன்றினால் மேற்கொள்ளப்படும்.

**3. தேர்வுமுறைகளின் நோக்கம் :-**

I. நோக்கம் மற்றும் பிரவேசம்
வெற்றிகரமான முறையில் நோக்கத்தைத் தெளிவுப்படுத்தல் மற்றும் பாடத்திற்குப் பிரவேசிக்கும் திறனை மதிப்பிடுதல்.

II. ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு
ஆசிரியராக சிறந்த ஆளுமையைக் கொண்டிருத்தல் மற்றும் கற்பித்தலின் போது சிறந்த முறையில் குரலைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கான திறனை மதிப்பிடுதல்.

III. தெளிவான தொடர்பாடல்
கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது ஏற்புடைய விடயங்களை வினைத்திறனான முறையில் தொடர்பாடக் கூடிய திறனை மதிப்பிடுதல்.

IV. நேர முகாமைத்துவம்
வழங்கப்படும் காலப்பகுதியினுள் நோக்கத்தை அணுகும் ஆற்றலை மதிப்பிடுதல்.

V. முன்னிலைப்படுத்துகையின் போது உத்திகளின் பயன்பாடு
நோக்கத்தை அணுகுவதன் பொருட்டு முன்னிலைப்படுத்துகையின் போது உத்திகளை சிறந்த முறையில் பயன்படுத்தும் திறனை மதிப்பிடுதல்.

குறிப்பு:

தற்போதுள்ள “ஊ” பின்னிணைப்பு “எ” பின்னிணைப்பு எனவும்

தற்போதுள்ள “எ” பின்னிணைப்பு “ஏ” பின்னிணைப்பு எனவும்

தற்போதுள்ள “ஏ” பின்னிணைப்பு “ஐ” பின்னிணைப்பு எனவும் திருத்தியமைக்கப்படுகின்றன.

11-634

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.